TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)
(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109414

1. District மாவட்டம் : Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 09/2024 Date நாள் 31.07.2024

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 26.07.2024 Date to : நாள் வரை 31.07.2024
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.00 hrs Time to : நேரம் வரை 10.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.07.2024 Time : நேரம் 16.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 31.07.2024 Time : நேரம் 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 5 Kms / East
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி விருதுநகர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலுள்ள சமூகநல அலுவலகம்,
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.B.ஜெயமுருகன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.பாலமுருகன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 06.05.1999 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Painter (g) Address : முகவரி அம்பேத்கார் நகர், கால்நடை மருத்துவமனை அருகில், விருதுநகர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி.முருகேஸ்வரி, ஊர்நல அலுவலர், சமூகநல அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 31.07.2024 மாலை 16.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் கால்நடை மருத்துவமனை அருகிலுள்ள அம்பேத்கார் நகரில் வசிக்கும் திரு.பாலமுருகன் என்பவரின் மகன் திரு.B.ஜெயமுருகன் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகாரை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 31.07.2024 இரவு 19.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திருமதி.முருகேஸ்வரி, ஊர்நல அலுவலர், சமூகநல அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், விருதுநகர், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2024 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன்.

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B.Jeyamurugan. 31.7.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

01.08.2024 at 09.30 hrs.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R.BOOMINATHAN.
Rank: நிலை INSP. OF POLICE.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

<u>விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.09/2024 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி</u>

வாதி திரு.B.ஜெயமுருகன் அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் B.ஜெயமுருகன், வயது 26, த/பெ.P.பாலமுருகன், அம்பேத்கார் நகர், கால்நடை மருத்துவமனை அருகில், விருதுநகர். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்சம் ஒழிப்பு துறை அலுவலகம், விருதுநகர். ஐயா, நான் விருதுநகரில் உள்ள அம்பேத்கார் நகரில் வாடகை வீட்டில் மனைவி மற்றும் குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். இதற்குமுன்பு விருதுநகர், கோட்டைப்பட்டி, இராமமூர்த்தி ரோடு, கம்மாப்பட்டி 1வது தெரு, கதவு எண்.105/5 என்ற முகவரியில் என்னுடைய அப்பா அம்மாவுடன் கூட்டு குடும்பமாக குடியிருந்து வந்தேன். நான் பட்டப்படிப்பு முடித்துவிட்டு, பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். நான், திருமதி.பாண்டீஸ்வரி என்பவரை 3 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்துள்ளேன். எனக்கு 2 வயதுடைய ஆதவி, 1 வயதுடைய முத்ரா என்ற இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். தமிழக அரசின் முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ஒரு குழந்தைக்கு 25,000/- வீதம் இரண்டு குழந்தைகளுக்கு மொத்தம் 50,000/- மதிப்பிற்கு பிக்ஸ்டு டெபாசிட் பாண்டுகளாக நிதி உதவி தருவதாக கேள்விபட்டேன். ஆகையால் மேற்படி திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்காக அதற்குரிய ஆவணங்களுடன் விருதுநகர் ஊராச்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள ஈசேவை மையத்திற்கு கடந்த 23.11.2023ஆம் தேதி சென்று, சேவை கட்டணமாக ரூ.120/- கொடுத்து என்னுடைய மனைவி பாண்டீஸ்வரி பெயரில் விண்ணப்பித்தேன். அதற்கு ஒப்புகைச்சீட்டு கொடுத்தார்கள். நீண்ட நாள்களாகியும் எந்த தகவலும் வரததால், அந்த ஒப்புகைச்சீட்டுடன் விருதுநகர் ஊராச்சி ஒன்றிய அலுவலக வளாகத்திற்குள் உள்ள சமூக நல அலுவலகத்திற்கு கடந்த 26.07.2024ஆம் தேதி காலை சுமார் 11.00 மணி அளவில் எனது மனைவி திருமதி.பாண்டீஸ்வரியுடன் சென்று, அங்கிருந்த ஊர்நல அலுவலர் திருமதி.முருகேஸ்வரி என்பவரை சந்தித்து, ஒப்புகைச்சீட்டை காண்பித்து விவரம் கேட்டேன். அப்போது அவர், ஒப்புகைச்சீட்டை வாங்கி பார்த்துவிட்டு, உங்களுக்குரிய ஆவணங்களை எல்லாம் சரிபார்த்துவிட்டேன், நீங்கள் தமிழக முதல்வரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பயனாளியாக தகுதிவுடைவர்தான், நீங்கள் இதுநாள்வரை என்னை வந்து சந்திக்காததால் தான் உங்களை பயனாளியாக்காமல் இருந்தேன், நீங்கள் எனக்கு தனியாக பணம் ரூ.3000/- கொடுத்தால் உங்களை இத்திட்டத்தில் பயனாளியாக்குவேன் என்று கூறினார். அவருக்கு பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. இருந்தாலும் அப்போது நான் அவரிடம், ரூ.3000/- பணம் கொடுக்கனுமா மேடம், இப்ப என்கிட்ட ரூ.3000/- பணம் இல்லை, பின்னர் வந்து தரேன் மேடம் என்று சொன்னேன். அப்பொழுது அவர், அங்கிருந்த ஒரு கோப்பை எடுத்து, என்னுடைய மனைவி பெயர் விவரம் எழுதியிருந்த இடத்தில் என் மனைவியிடம் கையெழுத்து வாங்கிவிட்டு, ரூ.3000/- பணத்துடன் வருமாறு அனுப்பிவைத்தார். பின்னர் இன்று

(31.7.2024) காலை சுமார் 10.30 மணி அளவில் விருதுநகர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திற்குள் உள்ள சமூக நல அலுவலகத்திற்கு நான் மட்டும் சென்று, அங்கிருந்த ஊர்நல அலுவலர் திருமதி.முருகேஸ்வரி அவர்களை சந்தித்து, தமிழக முதல்வரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பயனாளியவது சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர் என்னிடம், நான் கேட்ட ரூ.3000/- பணத்தை கொண்டு வந்து தாரேனு சொல்லிட்டு போனிங்களே, கொண்டு வந்திருக்கீங்களா என்று கேட்டார். அதற்கு நான், நானே பெயிண்டிங் கூலி வேலை செய்துதான் பொழப்பு நடத்திட்டு வாரேன் மேடம், ரொம்ப கஷ்டபட்டவன் மேடம், பணம் இல்லாம முடியாதா மேடம் என்று சொல்லி கேட்டேன். அதற்கு அவர், பணம் இல்லாம முடியாதுப்பா, அரசாங்கம் கொடுக்கிற பணத்த நீங்கதான் அனுபவிக்க போறீங்க என்று கூறி, பெயிண்டிங் கூலி வேலை பாக்கிறேனு நீங்க சொல்றதால ரூ.1000/- பணத்தையாவது ரெடி பண்ணி கொண்டுவந்து என்னிடம் கொடுங்க, நீங்க பணம் கொடுத்தால்தான் உங்களை இத்திட்டத்தில் பயனாளியாக்க பரிந்துரை செய்வேன் என்று கராறாக கூறினார். ஊர்நல அலுவலர் திருமதி.முருகேஸ்வரி அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. இருந்தாலும் அவரிடம் அப்போது சரிங்க அம்மா, இப்ப 1000/- ரூபா பணம் இல்லை, நாளைக்கு வந்து தாரேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நாங்கள் தமிழக முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பயனடைய, எங்களுடைய விண்ணப்பத்தை பரிந்துரை செய்து, பிக்ஸ்டு டெபாசிட் பாண்டுகளை பெற்று தறுவதற்காக என்னிடம் லஞ்சமாக ரூ.1000/- பணம் கேட்ட விருதுநகர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊர்நல அலுவலராக பணிபுரியும் திருமதி.முருகேஸ்வரி என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் இப்படிக்கு (sd) B.Jeyamurugan. 31.7.2024 Sir, Received the complaint on 31.07.2024 at 16.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.9/2024 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on 31.07.2024 at 19.00 hrs and took up for investigation. (Sd) (R.Boominathan) 31.7.2024 (R.BOOMINATHAN, INSP of Police, V&AC, VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

31/7/24
INSP of Police,
V&AC, VNR.